**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.55** **நாள்: 08.03.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 10.03.2019 அன்று நடைபெறும் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

கடந்த 23 வருடங்களாக அகில இந்திய அளவில் தீவிர கூடுதல் போலியோ சொட்டுமருந்து முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் 10.03.2019 அன்று தீவிர போலியோ சொட்டுமருந்து முகாம் நடைபெறவுள்ளது.

தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறும் நாளான 10.03.2019 அன்று பெருநகர சென்னை மாநகரில் 5 வயதிற்குட்பட்ட சுமார் 7.13 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு 1,644 சொட்டுமருந்து மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உலக சுகாதார நிறுவனம் இந்தியாவை போலியோ நோய் இல்லாத நாடாக அறிவித்துள்ள போதிலும், அண்டைநாடுகளில் போலியோ நோய் தாக்கம் இருப்பதால் போலியோ நோய் கிருமி பரவும் அபாயம் உள்ளது. இதனால், இந்த வருடமும் போலியோ சொட்டு மருந்து முகாம் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. பெற்றோர்களாகிய நீங்கள், உங்கள் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தவறாமல் போலியோ சொட்டுமருந்து கொடுக்க வேண்டும். உங்கள் வீட்டின் அருகாமையில் உள்ள சொட்டு மருந்து மையத்திற்குச் சென்று, உங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து போட்டுக்கொள்ள வேண்டும். சொட்டு மருந்து குழந்தைகளுக்கு கொடுத்தவுடன் இடது கை சுண்டுவிரலில் அடையாள மை வைக்கப்படும். எந்த ஒரு குழந்தையும் போலியோ சொட்டுமருந்து கொடுப்பதில் இருந்து விடுபடாமல் இருப்பதற்கு அடையாள மை வைக்கப்படுகிறது. போலியோ சொட்டுமருந்து போடுவதால் எந்தவித தீங்கும் கிடையாது. ஆகவே, அனைத்து குழந்தைகளும் போலியோ சொட்டு மருந்தை ஒரே நாளில் போட்டுக் கொள்வதன் மூலம், போலியோ நோய் பரவும் வைரஸ் கிருமிகள் அவர்களது ஜீரண மண்டலத்திலிருந்து அகற்றப்பட்டு அழிக்கப்படுகின்றது. இதன் மூலம் போலியோ நோயை பரப்பும் வைரஸ் கிருமிகளை சுற்றுச்சூழலிலிருந்து அறவே ஒழிக்கலாம்.

குழந்தைகளுக்கு ஏற்கனவே போலியோ சொட்டுமருந்து முறையாக கொடுத்திருந்தாலும் 10.03.2019 அன்று நடைபெறும் தீவிர போலியோ சொட்டுமருந்து முகாமில் அவசியம் சொட்டு

மருந்து குழந்தைகளுக்கு போட்டுக் கொள்ள வேண்டும். முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்தும் வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்தும் மாற்று மருந்து அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.

தீவிர போலியோ சொட்டு மருந்தை குழந்தைகளுக்கு கொடுப்பதற்கு, பெருநகர சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்கள், அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், மருந்தகங்கள், சத்துணவு மையங்கள், தனியார் மருத்துவமனைகள், இரயில்வே நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகிய இடங்களில் சொட்டுமருந்து மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மெரினா கடற்கரை, சுற்றுலா பொருட்காட்சி, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையங்களில் நடமாடும் சொட்டு மருந்து மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தீவிர போலியோ சொட்டுமருந்து முகாம் காலை 7.00 மணிக்கு தொடங்கி, இடைவெளியின்றி மாலை 5.00 மணி வரை தொடர்ந்து நடைபெறும். சொட்டுமருந்து முகாம்களில் சிறப்பாக பணி செய்ய பல்வேறு அரசுத்துறை பணியாளர்கள், ரோட்டரி சங்க உறுப்பினர்கள், அங்கன்வாடி அலுவலர்கள், மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட சுமார் 6,700 நபர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2017 மற்றும் 2018–ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போலியோ சொட்டுமருந்து முகாமின் பயனாளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | முகாம் நடைபெற்ற நாள் | குழந்தைகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | 02.04.2017 | 6,94,415 | 7,55,938 | 108.9 |
| 2. | 30.04.2017 | 7,00,738 | 7,53,022 | 107.5 |
| 3. | 28.01.2018 | 7,05,802 | 7,49,436 | 106.2 |
| 4. | 11.03.2018 | 7,11,897 | 7,50,902 | 105.5 |

**பெருநகர சென்னை மாநகராட்சியில் போலியோ சொட்டுமருந்து மையங்களின் விவரம்**

| | |
|---|---|
| மக்கள் தொகை | 77.4 இலட்சம் |
| 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | 7.13 இலட்சம் |
| மையங்களின் எண்ணிக்கை (நிரந்தரம்) | 1,440 |
| பேருந்து நிலையங்கள் மற்றும் இதர மையங்கள் | 163 |
| நடமாடும் மையங்கள் | 41 |
| மொத்த மையங்கள் | 1,644 |

மற்ற மாநிலங்களில் இருந்து வேலை நிமித்தம் சென்னை மாநகரில் குடியேறி, இங்கு தொடர்ந்து தங்கி இருப்பவர்களின் குழந்தைகளுக்கும், சென்னை வந்து போகும் குழந்தைகளுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் 10.03.2019 அன்று நடைபெறும் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமில் கலந்துகொண்டு போலியோ சொட்டுமருந்து போட்டுக் கொண்டு பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**